பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 14 வெள்ளிக்கிழமை 31.10.2025 கதிர் 355

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சித் தலைவர் சிவஞானத்தின்கீழ்சீராக,அமைதியாக, குழப்பங்கள் இன்றி முன்னகர்ந்து வருவதாக வெளித் தோற்றத்திற்குத் தெரிந்தாலும் உள்ளே ☞2

# பாடசாலை நேரத்தை நீடித்தால் பணிப்புறக்கணிப்பு நடந்தே தீரும்

## இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

லயன் அறைகளில் வாழும் மக்களை சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களாக மாற்றி, அவர்களுக்கு மூலதனத்தைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம், பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம். எனவே ஆளும்தரப்பு அதற்கான நடவடிக்கைகள் குறித்து அவதானம் செலுத்த வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தலைமையிலான சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழு அண்மையில் கூடியது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதனைத் தெரிவித்தார்.

நமது நாட்டின் தேசிய தேயிலை உற்பத்தியில் சிறு தேயிலைத்தோட்டஉரிமையாளர்கள்அண்ணளவாக60 சதவீதமான பங்களிப்பை வழங்குகின்றனர். தேயிலைத் தோட்ட காணிகளில் 30 - 40 சதவீதமானவையே இவர்களுக்குஉரித்துடையவையாகக்காணப்படுகின்றன. சிறியளவிலான காணிகளை வைத்திருப்பவர்கள் பெரும் பங்களிப்பை வழங்கும்போது, பெரும் ☞6

# பெருந்தோட்டத் தொழிலாளர்களை சிறு தோட்ட முதலாளிகள் ஆக்குங்கள்

## ஆளும்தரப்பிடம் சஜித் பிரேமதாச வலியுறுத்து

லயன் அறைகளில் வாழும் மக்களை சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களாக மாற்றி, அவர்களுக்கு மூலதனத்தைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம், பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம். எனவே ஆளும்தரப்பு அதற்கான நடவடிக்கைகள் குறித்து அவதானம் செலுத்த வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தலைமையிலான சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அண்மையில் கூடியது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதனைத் தெரிவித்தார்.

நமது நாட்டின் தேசிய தேயிலை உற்பத்தியில் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் அண்ணளவாக 60 சதவீதமான பங்களிப்பை வழங்குகின்றனர். தேயிலைத் தோட்ட ☞2

# அரசாளுகையில் சர்வாதிகாரப் போக்கை ஊக்குவிக்கின்றது என்.பி.பி. ஆளும்தரப்பு

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு

**நாட்டில் இன்று மக்கள் பிரதிநிதிகள் வெளியே சென்று சேவையாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. நாடு பாதாள உலகக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அச்சுறுத்தல்களையும் மிரட்டல்களையும் விடுத்து, அரசாளுகையில் சர்வாதிகார போக்கை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளிலும் ஆளும்தரப்பு ஈடுபட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.**



**கொழும்பு - மட்டக்குளி பிரதேசத்தில் புதன்கிழமை மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:**

**தற்போதுள்ள முறைமையில் மாற்றத்தைக் கொண்டு வந்து, நீதி நியாயம் மற்றும் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதாக தேசிய மக்கள் சக்தி உறுதியளித்தது. ஆனால்** ☞2

# மாகாணத் தேர்தல் நடக்கும் நாளே இந்த ஆளும்தரப்புபின் இறுதி நாள்

## ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. தெரிவிப்பு

முடிந்தால் மாகாணசபைத் தேர்தலை நடத்திக் காட்டுமாறு ஆளும்தரப்புக்குச் சவால் விடுக்கின்றோம். இனியும் மாகாணசபைத் தேர்தலை காலம் தாழ்த்த முடியாது. மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் தினமே இந்த ஆளும்தரப்பின் இறுதி தினம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே ஆளும்தரப்பிடம் வலியுறுத்தினார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதுவுமே தெரியாத அமைச்சர்கள் குழுவொன்று தற்போது நாடாளுமன்றத்தில் அமர்ந்திருக்கிறது. அதனை மக்களும்உணரத்தொடங்கியிருக்கின்றனர். நாட்டிலிருந்து போதைப்பொருளை முற்றாக ஒழித்து நாட்டைக் கட்டியெழுப்புவது சிறந்த வேலைத்திட்டமாகும். ☞2

# அரச மருத்துவ அதிகாரிகள் நாளை பணிப் புறக்கணிப்பு

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாளை (31) காலை 8.00 மணி முதல் தொடங்கும் வகையில் நாடளாவிய ரீதியில் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

நாட்டின் அனைத்து வைத்தியசாலைகளும் இந்த வேலைநிறுத்தத்தில் கலந்துகொள்ளும் என்று அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, அனைத்து தினசரி சிகிச்சை சேவைகளும் பாதிக்கப்படும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், சுகாதார அதிகாரிகள் ☞2

# யுவான் மூலமான வர்த்தகத்தை இலங்கை ஊக்குவிக்க வேண்டும்

## சீன நாட்டுத் தூதுவர் வலியுறுத்து

இலங்கை பொருளாதார மீட்சியின் முக்கியமான கட்டத்தில் இருக்கின்றது. இவ்வேளையில் சீன நாணயத்தின் மூலமான கொடுக்கல், வாங்கல்களை விரிவுபடுத்துவதானது இலங்கைக்குள் வர்த்தகம் மற்றும் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கும், நிதியியல் கட்டமைப்பை நவீனமயப்படுத்துவதற்கும் பங்களிப்புச்செய்யும் என இலங்கைக்கான சீனத் தூதுவர் சி சென்ஹொங் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சீனநாணயத்தை சர்வதேசமயப்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் உருவாக்கப்பட்டு இவ்வருடத்துடன் 80 வருடங்கள் பூர்த்தியடைகின்றன. ஐக்கியநாடுகள்சபையின் உருவாக்கம் முதல் சர்வதேச நாணயக் கட்டமைப்பானது டொலரை மையப்படுத்திய நாணயமாற்று வீத முறைமையில் இருந்து டொலரை மையப்படுத்திய மிதக்கும் வீத முறைமையாக நிலைமாற்றமடைந்தது.

இவ்வாறான தொரு ☞6

# எதிர்க் கட்சிகளில் உள்ளவர்கள் அனைவருக்கும் உயிர் அச்சுறுத்தல்

## ஹர்ஷன நாணயக்கார எம்.பி. குற்றச்சாட்டு

எதிர்க்கட்சிகளிலுள்ள அனைவருக்கும் உயிர் அச்சுறுத்தல் காணப்படுகிறது. சமூக வலைத்தளங்களில் பகிரங்கமாக உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. ☞2

# இலங்கையில் முதியோர் எண்ணிக்கை 10 ஆண்டுகளில் 3 சதவீதம் அதிகரிப்பு

2024ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சனத்தொகை மதிப்பீட்டுக்கமைய, இலங்கையின் மொத்த சனத்தொகை 21.7 மில்லியனாக (21,781,800) பதிவாகியுள்ளது. இதில் 51.7 சதவீதம் பெண்களும்,48.3 சதவீதம் ஆண்களும் காணப்படுகின்றனர். கம்பஹா மாவட்டம் அதிக சனத்தொகை (2436142) மாவட்டமாகவும், முல்லைத்தீவு குறைவான சனத்தொகை (122619) மாவட்டமாகவும் பதிவாகியுள்ளது.

சனத்தொகை மதிப்பீட்டில் பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. ஆயுட்காலமும் அதிகரித்துள்ளது. 65 வயதுக்கு மேற்பட்டோர் 12.6. சதவீதமாக அதிகரித்துள்ளதுடன், தங்கி வாழ்வோரின் வீதம் 49.8 சதவீதமாக அதிகரித்துள்ளது.

2024ஆம் ஆண்டுக்கான குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பு ,இறுதி அறிக்கையை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் நேற்று வெளியிட்டது.

☞2

## இனி இது .....

எரிமலையாகக் குமுறிக்கொண்டிருக்கின்றது என்பதே உண்மை. இரு அணிகளின் மோதல் உச்சமாகக் கனன்று வருகின்றது. தலைவரின் நேற்றைய செய்தியாளர்கள் சந்திப்பில் இந்த பிரதிபலிப்பை உணர முடிந்தது. வெளிப் பார்வைக்கு அவர் கட்சியின் நிலைப்பாட்டையே வெளிப்படுத்தினார் என்று தோன்றினாலும் அந்தக் கருத்துக்கள் கட்சியின் ஒரு அணியினருக்கான தெளிவான செய்தி.

மாகாண சபைத் தேர்தல் நடந்தால் கட்சிக்குப் பங்களித்தோர் தவிர வேறு எவரையும் முதலமைச்சர் வேட்பாளராக இறக்குமதி செய்யமாட்டோம் என்று அவர் நேற்றுச்செய்தியாளர்சந்திப்பில்திட்டவட்டமாகத் தெரிவித்தார். கட்சியின் உறுப்பினராக இல்லாவிட்டாலும் பரவாயில்லை, கட்சிக்குப் பங்களித்தவராகவோ கட்சி நலன்களில் அக்கறை செலுத்தியவராகவோ அவர் இருக்கவேண்டும்என்றும்தெரிவித்திருக்கிறார்.

இதற்கு உட்கட்சிக்குள் ஒரு காரணம் இருக்கின்றது. முதலமைச்சர் வேட்பாளராகத் தான் களமிறங்க விருப்பமாக இருக்கின்றார் என்று சுமந்திரன் தெரிவித்திருந்த நிலையில், அவரைமுதலமைச்சராகவிடக்கூடாதுஎன்பதில் கவனமாக இருக்கும் மற்றொரு அணியினர் முன்னாள் நீதிபதி ஒருவரை முதலமைச்சர் வேட்பாளராகக்களமிறக்கும்யோசனையோடு காய்களை நகர்த்துகின்றது. ஏற்கனவே ஒரு நீதியரசரோடு அனுபவப்பட்ட மக்கள் இந்த நீதிபதியை ஆதரிப்பார்களா, அப்படி ஆதரிக்கத் தக்க வகையில் அவர் உண்மையில் ஏதாவது மக்கள் சேவையாற்றியிருக்கிறாரா என்பதற்கெல்லாம் அப்பால், சுமந்திரனைத் தடுப்பதற்கு என்ன செய்யலாம் என்பதே அந்த அணியினரின் ஓட்டம். இது தொடர்பில் அந்த அணியினர் மிகத் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

இதற்கானபதிலாகவேசிவஞானம்கட்சிக்குள் யாரையும்இறக்குமதிசெய்யமாட்டோம்என்று தெரிவித்திருக்கிறார். வெளியிலிருந்துயாராவது வருவதாக இருந்தாலும் அவர் கட்சியோடு தொடர்புபட்டவராக, கட்சியின் நலன்களைக் கவனித்தவராக, கட்சிக்கு ஏதோ ஒரு விதத்தில் பங்களித்தவராக இருக்கவேண்டும் என்பதை அவர் வலியுறுத்துவதற்குக் காரணம், இது எதுவுமில்லாத முன்னாள் நீதிபதிக்கு இடமில்லை என்பதுதான். அந்த நீதிபதியின் சகோதரர் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர். ஆனால் சுமந்திரன் எதிர்ப்பாளர். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கட்சிக்குள் இருந்துகொண்டே கட்சியிலிருந்து பிரிந்து சென்று தேர்தல் கேட்டவர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டவர். தீவகத்தில் தமிழ் அரசுக் கட்சி ஒரு பிரதேச சபையை இழப்பதற்குக் காரணமாகக் காய்களை நகர்த்தியவர் என்று கட்சி நம்புபவர். கட்சியின் ஒழுக்காற்று விசாரணையின் இலக்குகளில் ஒன்றாக இருப்பவர்.

இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டே கட்சிக்குள் இருக்கும் ஒரு தரப்பினருக்குத் தெளிவான செய்தியை சிவஞானம் வழங்கியுள்ளார். அதற்காகஅந்தத்தரப்பினரும் சோர்ந்து போய்விடுவதாகத் தெரியவில்லை. கட்சியைக் கைப்பற்றும் தமது நகர்வுகள் வெற்றிபெறாத நிலையிலும், தமது அரசியலை உறுதிப்படுத்திக் கொள்வதில் அவர்களும் தீவிரமாகச் செயலாற்றிக் கொண்டே இருக்கின்றார்கள்.

கட்சிக்குள் தமது பிடியை பலப்படுத்த முடியாத நிலையில் கட்சியை விட்டு வெளியேறுவதானால்கூட, ஒரு உதிரியாக வீழாமல் கட்சியை உடைத்து அதிலிருந்து கணிசமானவர்களையும்சேர்த்துவெளியேற்ற வேண்டும்என்பதேஅவர்களது எதிர்ப்பார்ப்பும் காய் நகர்த்தலும் என்பது கட்சியின் தலைமைக்குத் தெரிந்தே இருக்கிறது. இந்த நடவடிக்கைகள் அனைத்தையும் கட்சித் தலைமையும் நன்கு கவனித்துக்கொண்டே இருக்கின்றது.

அண்மையில் இந்தத் தரப்பினர் கட்சியின் பிரதேசமட்டச்செயற்பாட்டாளர்களைச்சந்தித்து தமது நாடி பிடித்துப் பார்த்திருக்கின்றது. ஒருவேளை தாம் பிரிந்து செல்லும் நிலை ஏற்பட்டால் தம்மோடு, தம்மை நம்பி வரக்கூடியவர்கள் இருக்கிறார்களா என்பதை நாடிபிடித்தறிவதே இந்தச் சந்திப்புக்களின் நோக்கம். அதன் தொடர்ச்சியாக, பிரதேசசபைத் தலைவர்களுடனும் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தது இந்தத் தரப்பு. தமது நோக்கம் பகிரங்கமாக வெளித் தெரியாதிருப்பதற்காக, எல்லா பிரதேச சபைத் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரதேச சபைகளிலுள்ளதமிழ்அரசுக்கட்சிப்பிரதிநிதிகளி இந்தச் சந்திப்பிற்குச் செல்லவில்லை. கட்சியை ஒரு மாவட்டமாகப் பிளக்காமல் யாழ்ப்பாணத்திலிருந்தும்கட்சியைஉடைத்துத் தம்மோடு சேர்த்துக் கொண்டு செல்ல முடியுமா என்ற முயற்சியில் அவர்களின் தொடக்க முயற்சிகள் சறுக்கலைச் சந்தித்திருக்கின்றன என்பது நன்கு தெரிகிறது. போதாததற்கு அவர்கள் எதிர்பார்க்கும் முதலமைச்சர் வேட்பாளருக்கும் தலைவர் இப்போது தடாலடியாகத் தடை அறிவித்திருக்கின்றார்.

இந்தப் பின்னடைவுகளுடன் அவர்கள் முடங்கிப்போகின்றனரா அல்லது மனந்தளராத விக்கிரமாதித்தன்களாக மீண்டும்மீண்டும் முயற்சித்து தமிழ் மக்களின் அரசியலை சவக் குழிக்குப் புதைக்கப் போகின்றனரா என்பதை பொறுத்திருந்து பார்த்து உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன். .

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அரசாளுகையில்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும்தரப்பு கொண்டு வந்துள்ள புதிய முறைமை மாற்றத்தில், கொலை கலாச்சாரம் பரவலடைந்து, கொலைகளின் எண்ணிக்கைகள்தான் அதிகரித்துள்ளன.

போட்டிக்காக்ககொலைகள்இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. மக்கள் பிரதிநிதிகள் வெளியே சென்று சேவையாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இன்று நாடு பாதாள உலகக்குழுக்களிடம்ஒப்படைக்கப்பட்டுள்ளது. அச்சுறுத்தல்களையும் மிரட்டல்களையும் விடுத்து, அரசாளுகையில் சர்வாதிகார போக்கை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

அரசைமையமாகக்கொண்ட சர்வாதிகார கட்டமைப்பை உருவாக்கி, ஜனநாயகத்தை குழிதோண்டி புதைக்கும் முயற்சிகளை தற்போது மேற்கொண்டு வருகிறது. ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த வெலிகம தவிசாளர், தனது உயிருக்கு அச்சுறுத்தல்கள் இருப்பதாகக் கூறி, பொலிஸ் மா அதிபருக்கு எழுத்து பூர்வமாக கோரிக்கை விடுத்திருந்தார்.

ஆனாலும் இறுதியில் அவருக்கு பாதுகாப்பு வழங்கப்படாததால் அவர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகியுள்ளார். ஜகத் விதானாவுக்குக் கூட உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இந்த உயிர் அச்சுறுத்தல்களை பொலிஸார் வெளிப்படுத்தவில்லை. ஜகத் விதான தாமகவே நாடாளுமன்றத்தில் இதனை வெளிக்கொணர்ந்தார்.

இதுகுறித்துஜகத்விதானகருத்துவெளியிட்ட போது, பொலிஸ் மா அதிபர் நேரடியாகவே அவரை குற்றவாளியாக்கியுள்ளார். எதிர்க்கட்சியைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உயிருக்கு ஆளும்தரப்பே பொறுப்புக்கூறவேண்டும். பாதுகாப்பைஉறுதிசெய்யுமாறுசபாநாயகருக்கு எழுத்துபூர்வமாக அறிவித்தும், வேண்டுகோள் விடுத்தும் இதுவரை எந்தப் பதிலும் இல்லை. நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு ஏதேனும் நடந்தால், ஆளும்தரப்பே பொறுப்புக்கூறவேண்டும். பொய்களை ஒதுக்கி வைத்துவிட்டு, சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தக் கொலைகாரர்கள், போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய குழுக்கள் அல்லது திட்டமிட்ட குற்றச் செயல்களை மேற்கொண்டு வரும் குழுக்களுடன் ஐக்கிய மக்கள்சக்தியினருக்குஎந்தவிததொடர்புகளும் இல்லை என்றார்.

## மாகாணத்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் அது பொது நிர்வாகத்தின் பிரதான பொறுப்பல்ல. போதைப் பொருள் ஒழிப்பு என்பது அரச நிர்வாகத்தின் ஒரு பகுதி மாத்திரமேயாகும். கடந்த ஆளும்தரப்புகளும் இதனைச்செய்திருக்கின்றன. ஆனால் அவை ஊடகங்கள் ஊடாகப் பெரும் பரப்புரைகளாக முன்னெடுக்கப்படவில்லை.

எவ்வாறுஆளும்தரப்பைநிர்வகிப்பதுஎன்று தெரியாமல் அரசுத் தலைவர் அநுரகுமார திண்டாடிக் கொண்டிருக்கின்றார். அதனால் பொலிஸ்மா அதிபர் ஊடாக ஆட்சியை முன்னெடுத்துச் செல்ல முயற்சிக்கின்றனர். அந்த அடிப்படையிலேயே வெலிகம பிரதேச சபைத் தலைவரின் கொலை தொடர்பான விசாரணைகளை சமூக ஊடகங்களில் பகிரங்கமாக முன்னெடுக்கின்றனர். இவ்வாறு பொலிஸ்மா அதிபரைக் கொண்டு ஆட்சியை முன்னெடுத்துச் செல்ல முடியாது என ஆளும்தரப்பை எச்சரிக்கின்றோம்.

போதைப்பொருள் பிரசாரங்களைத் தவிர அபிவிருத்திகள் தொடர்பிலோ முதலீடுகள் தொடர்பிலோ முதலீட்டு வருமானம் தொடர்பிலோ ஆளும்தரப்பால் இதுவரையில் எந்தவொரு அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. எதிர்க்கட்சிகளைஒடுக்கி முன்னெடுக்கப்படும் அரசியலுக்கு மக்கள் எவ்வாறு பதிலளிக்கப் போகின்றனர் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். எனவே முடிந்தால் மாகாணசபைத் தேர்தலை நடத்திக் காட்டுமாறு ஆளும்தரப்புக்குச் சவால் விடுக்கின்றோம். இனியும் மாகாணசபைத் தேர்தலை காலம் தாழ்த்த முடியாது. மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் தினமே இந்த ஆளும்தரப்பின் இறுதி தினமும் ஆகும் என்றார்.

## பெருந்தோட்டத் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணிகளில் 30 - 40 சதவீதமானவையே இவர்களுக்கு உரித்துடையவையாகக் காணப்படுகின்றன. சிறியளவிலான காணிகளை வைத்திருப்பவர்கள் பெரும் பங்களிப்பை வழங்கும்போது, பெரும் காணி உரிமைகளை வைத்திருக்கும் ஆளும்தரப்புக்குச்சொந்தமான நிறுவனங்கள் அல்லது தனியாருக்குச் சொந்தமான தோட்டக் கம்பனிகள் குறைவான பங்களிப்பையே வழங்கி வருகின்றன.

இன்னும் லயன் அறைகளில் வாழும் மக்களை சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களாக மாற்றி, அவர்களுக்கு மூலதனத்தைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம், பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம். ஒரு வீட்டைப் போன்று செய்கைகளுக்கான காணியும் கிடைக்கும். இவ்வாறு மேற்கொண்டால் அவர்களின் சம்பளப் பிரச்சினைக்குக்கூட இதனால் தீர்வு கிட்டும். பயன்படுத்தப்படாத காணிகளை இவர்களுக்குப் பெற்றுக் கொடுத்து, பெரும் எண்ணிக்கையிலான சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களை உருவாக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தென்னைக் கைத்தொழில் தற்போது பல கடுமையான பிரச்சினைகளை எதிர்கொள்கிறது. தயவுசெய்து இந்த வரவுசெலவுத் திட்டத்திலாவது இவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கவேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் இதன்போது மேலும் வலியுறுத்தினார்.

இதன்போது கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர்அப்புஹாமி, தென்னைகைத்தொழில் பல கடுமையான பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிறது. ஒரு காலத்தில், தென்னைத் தொழில் முயற்சியாளர்கள் நஷ்டத்தைச் சந்திக்கும்போது, மற்றொரு காலத்தில், அதிகவிலைகாரணமாகநுகர்வோர் பாதிப்புக்களைச்சந்தித்துவருகின்றனர். மேலும் நோய்களும் அதிகரித்து காணப்படுகின்றன. எனவே இது தொடர்பான புதிய திட்டங்களை, புதிய வரவுசெலவுத் திட்டத்தில் ஆளும்தரப்பு முன்வைக்கவேண்டும் என்றார்.

## இலங்கையில்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

#### சனத்தொகை

2024ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சனத்தொகை மதிப்பீட்டுக்கமைய, இலங்கையின் மொத்த சனத்தொகை 21.7 மில்லியனாக(21,781,800)பதிவாகியுள்ளது.,தில் 51.7 சதவீதம் பெண்களும்,48.3 சதவீதம் ஆண்களும் காணப்படுகின்றனர். நாட்டில் 15 வயதுக்குக் குறைந்தவர்களின் எண்ணிக்கை 25.2 சதவீதத்தில் ,இருந்து 20.7 சதவீதமாகக் குறைந்துள்ளது. அதேபோல், இந்தக் காலக்கட்டத்தில் 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களின் சனத்தொகையானது 7.9 சதவீதத்திலிருந்து, 12.6. சதவீதமாக அதிகரித்துள்ளது.

2024 ஆம் ஆண்டில் 15-64 வயதுக்குட்பட்டவர்களின்சனத்தொகையானது மொத்த சனத்தொகையில் 66.7 சதவீதமாகக் காணப்படுகிறது. இது 2012 இல் 66.9 சதவீதமாகக் காணப்பட்டது. இலங்கையின் மொத்த சனத்தொகையில் 74.1 சதவீதம் சிங்களவர்கள், 12.3 சதவீதம் ,இலங்கைத் தமிழர்கள், 10.5 சதவீதமானோர் இலங்கை முஸ்லிம்கள், 2.7 சதவீதமானோர் இந்திய தமிழர்கள், மலையகத் தமிழர்கள் என்று பதிவாகியுள்ளனர். 0.3சதவீதகட்டமைப்புக்குள் பறங்கியர்கள், மலாயர்கள், இலங்கை செட்டிகள், பாரதர்கள், வேடர்கள் உட்பட பிற ,இனக்குழுக்களைச் சேர்ந்தோர் உள்ளடங்குகின்றனர்.

மத அடிப்படையில் நாட்டில் 69.8 சதவீதம் பௌத்தர்கள், 12.6 சதவீதம் இந்துக்கள், 10.7 சதவீதம் இஸ்லாமியர்கள், 5.6 சதவீதம் ரோமன் கத்தோலிக்கர்கள் மற்றும் 1.3 சதவீதம் ஏனைய கிறிஸ்தவர்கள் வாழ்கின்றனர்.

2012-2024 ஆண்டு வரையான காலக்கட்டத்தில், இலங்கையின் சனத்தொகையானது ஆண்டுதோறும் 0.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இக்காலப்பகுதியில் சனத்தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 325 தொடக்கம் 349 நபர்கள் வரை அதிகரித்துள்ளது.

2024 ஆம் ஆண்டு சனத்தொகை மதிப்பீட்டில் பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், ஆயுட்காலம் அதிகரித்துள்ளதுடன், வயது முதிர்ந்தோர் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது.

நகரம் மற்றும் மாவட்டங்களுக்கு இடையிலானஇடப்பெயர்வுபுதியபோக்கினைக் காட்டுகிறது.

#### வீட்டு வசதிகள்

நாட்டில் வசிக்கும் வீட்டுக்கூறுகளின் மொத்த எண்ணிக்கை 6,030,541 ஆக காணப்படுகிறது. அதிகளவான வீட்டுக்கூறுகள் மேல்மாகாணத்தில் காணப்படுகின்றன. குறைவான வீட்டுக்கு கூறுகளை வடக்கு மாகாணம் கொண்டுள்ளது.

நாட்டில் உள்ள வீட்டுக்கூறு வகைகளில் 95.66 சதவீதமானவை தனி வீடுகளாகவும், 4.32 சதவீதமான வீடுகள் இணைந்த வீடுகளாகவும்,0.02 சதவீதமானவை ஏனைய வீட்டுக்கூறுகளாகவும் பதிவாகியுள்ளன.

வீட்டுக்கூறுகளில் 97.9 சதவீதமானவை சுவர்களால் நிலையான தன்மையிலான பொருட்களால் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. 2.1 சதவீதமான வீடுகள் தற்காலிகமான பொருட்களைகொண்டுஅமைக்கப்பட்டுள்ளன.

மொத்த வசிக்கும் வீட்டுக்கூறுகளில் காணப்படும் மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 6,111,315 ஆகும். 38.9 சதவீதமானோர் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபையால்விநியோகிக்கப்படும் நீரைப் பெற்றுக்கொள்கிறார்கள். 97.4 சதவீதமானோர் மின்பாவனையாளர்களாக உள்ளார்கள். 92.2 சதவீதமானோருக்கு தனது வீட்டுக்கூறில் மலசலகூட வசதி காணப்படுகிறது.

## எதிர்க்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதாள உலகக் குழுக்களை அழிப்பதாகக் கூறி, அதன் ஊடாக எதிர்க்கட்சிகளை முடக்குவதற்கான முயற்சிகளையே ஆளும்தரப்பு முன்னெடுப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவுக்கு முன்கூட்டியேதனதுஉயிருக்குஅச்சுறுத்தல் காணப்படுவதாக தகவல் கிடைத்திருக்காவிட்டால் இன்று அவர் உயிருடன் இருந்திருப்பாரா என்பது சந்தேகமே. அவரைப் போன்று எதிர்க்கட்சிகளிலுள்ளஅனைவருக்கும்இவ்வாறு உயிர் அச்சுறுத்தல் காணப்படுகிறது. சமூக வலைத்தளங்களில்பகிரங்கமாகஅவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது.

ஆளும்தரப்பு மூலமே இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றனவா என்ற சந்தேகம் காணப்படுகிறது. வெலிகம பிரதேசசபைத்தலைவர்தனக்கானபாதுகாப்பை எழுத்து மூலம் உத்தியோகபூர்வமாகக் கோரியிருந்தபோதிலும், அவருக்கு பாதுகாப்பு வழங்கப்படவில்லை. இறுதியாக அவரது உயிர் பறிபோனது. துப்பாக்கிச்சூடுகளால் மாத்திரமின்றி, மர்மமான முறையிலும் ஒவ்வொரு நாளும் பல உயிரிழப்புகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டுமானால் பொலிஸ் அரசியல் மயப்படுத்தப்படுவதை முற்றாகத் தவிர்க்கவேண்டும்.

பொலிஸ் மா அதிபர் ஜே.வி.பியின் பொதுச் செயலாளரைப் போன்று செய்தியாளர் சந்திப்புக்களில் கருத்துக்களை வெளியிடுகின்றார். அவர்இந்தநாட்டின்பொலிஸ் மா அதிபராவார். மாறாக ஆளும்தரப்பின் பொலிஸ்மா அதிபரல்லர். ஜகத் விதானவுக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக தகவல் கிடைத்து ஒரு மாதம் கடந்தும் ஆளும்தரப்பால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பாதாள உலகக் குழுக்களை அழிப்பதாகக் கூறி, அதன் ஊடாக எதிர்க்கட்சிகளை முடக்குவதற்கான முயற்சிகளையே ஆளும்தரப்பு முன்னெடுக்கிறது என்றார்.

# முதலமைச்சர் வேட்பாளராக வெளி நபரை இறக்கமாட்டோம்

## கட்சிக்குப் பங்களித்தவருக்கே இடம் என தமிழ் அரசுக் கட்சித் தலைவர் திட்டவட்டம்

வரும் மாகாண சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியோடு தொடர்புடைய - கட்சிக்குப் பங்களிப்புச் செய்த பொருத்தமான எவராவது ஒருவரைத்தான் எங்களுடைய முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறக்குவோம். எந்தச் சந்தர்ப்பத்திலும் வெளியில் இருந்து யாரையும் இறக்குமதி செய்யமாட்டோம் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாணசபைத்தேர்தல்தாமதிப்பதுவருந்தத்தக்கது என நாங்கள் சொல்லியிருக்கின்றோம். மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்த வேண்டும் என்று அரசுத் தலைவரிடம் கோரியிருக்கின்றோம். மாகாண சபைத் தேர்தல் விரைந்து நடக்கவேண்டும் என்பது எங்களது எதிர்பார்ப்பு.

இதில் முதலமைச்சர் வேட்பாளரைப் பொறுத்த வரையில்எங்களதுகட்சியின்தெளிவானநிலைப்பாடு, கட்சிக்குள்ளே இருந்துதான் நாங்கள் ஒருவரை முதலமைச்சர் வேட்பாளராகத் தெரிவுசெய்வோம். எந்தச் சந்தர்ப்பத்திலும் வெளியில் இருந்து யாரையும் இறக்குமதிசெய்யமாட்டோம். எனினும், எங்களுடைய கட்சியில் அங்கத்தவராக இருப்பவர்தான் கட்சி என்றும் எடுக்க மாட்டோம். யாழ்ப்பாணத்திலோ - வடக்கு மாகாணத்திலோ எங்களோடு இணங்கிச் செயற்பட்டுக் கட்சியோடு இருந்தவர்கள், கட்சிக்காக வேலை செய்தவர்கள், உழைத்தவர்கள் என அவர்களில் ஒருவரைத்தான் நாங்கள் முதலமைச்சர் வேட்பாளராகத் தெரிவு செய்வோம். இதிலே தெளிவான ஒரு நிலைப்பாடு என்னவென்றால் கட்சியோடு தொடர்புடைய - கட்சிக்குப் பங்களிப்புச் செய்த பொருத்தமான எவராவது ஒருவரைத்தான் எங்களுடைய முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறக்குவோம் என்றார்.



தமிழ் அரசுக் கட்சி 'ஏக்கிய ராஜ்ஜிய' அரசமைப்புத் தொடர்பில் ஆளும்தரப்புடன் பேசப் போகிறது என்று கஜேந்திரகுமார் தெரிவிக்கும் கருத்துத் தொடர்பில் அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டபோது அவர் தெரிவித்ததாவது:

'ஏக்கிய ராஜ்ஜிய', ஒற்றையாட்சி என்பவற்றை நாங்கள் ஏற்கப் போவதில்லை என்பதை ஏற்கனவே அறிவித்துவிட்டோம். அப்படியிருக்கத்திரும்பத்திரும்ப இவைகளைப் பற்றிப் பேசுவதில் எந்த அர்த்தமுமே கிடையாது. புதிய அரசமைப்பைக் கொண்டு வருவது தொடர்பாக உத்தியோகபூர்வமாக எதுவும் அறிவிக்கப்படவில்லை. அரசு அறிவிக்கின்றபோது இதைப் பற்றிப் பேசலாம். ஆனாலும் ஒற்றையாட்சியையும்'ஏக்கியராஜ்ஜிய'வையும்ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

இதற்கு மேலேயும் 'ஏக்கிய ராஜ்ஜிய'வை வைத்து எமக்கு எதிராகப் பிரசாரம் செய்வது ஓர் அரசியல் தந்திரோபாயமே தவிர அது யதார்த்தம் அல்ல. எங்களுடைய கட்சியின் கொள்கையும் தெளிவான நிலைப்பாடும்ஒற்றையாட்சியல்ல. அப்படியிருக்கஎவ்வாறு நாங்கள் ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டதாகப் பிரச்சாரம் செய்ய முடியும்.?

'ஏக்கிய ராஜ்ஜிய' என்றால் அது ஒற்றையாட்சி அல்ல. அது ஒருமித்தது என்றுதான் வருகின்றது. எனினும், 'ஏக்கிய ராஜ்ஜிய', ஒருமித்தது என்ற இந்த விடயங்களில் தெளிவு இல்லை. ஆனாலும், அதை நாங்கள் ஏற்றுக்கொண்டதாகவும் இல்லை. 2016இல் தொடங்கப்பட்ட அரசமைப்பு வரைவு அதனடிப்படையில் சில விடயங்களைப் பரிசீலிக்கலாம் என இப்போதைய ஆட்சியாளர்கள் சொல்லியிருந்தனரே தவிர 'ஏக்கிய ராஜ்ஜிய'வைக் கொண்டு வருவதாக அவர்கள் சொன்னதும் கிடையாது. ஆகையினால் இப்போது எங்களுக்கு எதிராக முன்வைக்கின்ற பிரச்சாரங்களை நாங்கள் மறுதலிக்கின்றோம்.

உண்மையில் அப்படியொரு புதிய அரசமைப்பு வருகின்றபோது நிச்சயமாக எல்லாக் கட்சிகளோடும் நாங்கள் கூட்டாக இணைந்து கூட்டாக ஒரு நிலைப்பாட்டை எடுப்போம் என்பதை உறுதியாகச் சொல்ல விரும்புகின்றேன். புதிய அரசமைப்பை இந்த அரசு முன்னெடுக்கின்றபோது நாங்கள் தனித்துக் கருத்துக் கூற இருந்தாலும்கூட அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளோடும் சேர்ந்து ஒருமித்த கருத்தை முன்வைப்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவோம். அத்தகைய எண்ணம், சிந்தனை எங்களுக்கு உண்டு. அதற்மைய நடவடிக் கைகளை எடுப்போம். இது சம்பந்தமாக கட்சி ரீதியிலும் மத்திய செயற்குழுவிலும் பேசுவோம் - என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# 3000 இளைஞர்கள் இந்தாண்டு மட்டும் தொழில் தேடி தென்கொரியா பயணம்

இந்த வருடம் கடந்த 10 மாதங்களில் 3,253 இலங்கை இளைஞர் யுவதிகள் தொழில் நிமித்தம் தென்கொரியாவுக்கு புறப்பட்டுச் சென்றுள்ளனர் என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

தென் கொரியாவில் உற்பத்தி துறையியல் தொழிலுக்காக தகுதிபெற்றுள்ள 72 பேர் புதன்கிழமை புறப்பட்டுச்சென்றுள்ளதுடன் அந்த குழுவில் 2 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் தென்கொரிய மனித வள அபிவிருத்தி நிறுவனங்களுக்கிடையில் ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி ஈ 9 விசா அணியின் கீழ் இந்தத் தொழில் வாய்ப்பு கிடைப்பதுடன் தென்கொரியாவில் உற்பத்தி, நிர்மானம், கடற்றொழில் மற்றும் விவசாயம் போன்ற துறைகளில் இதன் மூலம் தொழில் கிடைக்கப்பெறும்.

மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் தொழில் எதிர்பார்த்திருப்பவர்கள் இணையவழி முறையில் தெரிவுசெய்யப் பட்டுவதுடன், பரீட்சையூபிரி முறைமையின் ஊடாக இடம்பெறும். அதற்காக எந்தத் தரப்புக்கும் அழுத்தங்களை பிரயோகிக்க முடியாது எனப் பணியகம் தெரிவித்துள்ளது.

தொழில் பயனாளிகளுக்கு 4 வருடங்கள் 10 மாத காலம் தென்கொரியாவில் தங்கி இருப்பதற்கு சந்தர்ப்பம் கிடைப்பதுடன், உரிய காலம் முடிவடைந்தவுடன் நாட்டுக்கு திரும்பும் தொழிலாளர்களுக்கு மீண்டும் தென்கொரியாவுக்குநுழைவதற்கும் அனுமதி கிடைக்கும் என பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பொது பொறுப்பும் அரசுப் பொறுப்பும் இணைந்ததே மருந்தகத் துறைத் தீர்வு

இலங்கையின் மருந்தக துறையில் நடைமுறையில் உள்ள சட்டங்களும் விதிமுறைகளும் சரியாக அமல்படுத்தப்படாமல் இருப்பது கடந்த சில வாரங்களாக மீண்டும் கவனத்துக்கு வந்துள்ளது. தேசிய மருந்து ஒழுங்குமுறை அதிகாரசபை (National Medicines Regulatory Authority – NMRA) சமீபத்தில் பதிவு செய்யப்படாத மருந்தகங்களுக்கு அவசர காலக்கெடு ஒன்றை வழங்கி, அதற்குப் பின் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என எச்சரித்துள்ளது. மேலும், ஒரு மருந்தகம் பதிவு பெற வேண்டுமானால் அதில் உரிமம் பெற்ற மருந்தாளர் பணியாற்ற வேண்டும் என்பதையும் அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த நடவடிக்கை, சட்டத்தின் அடிப்படையில் வரவேற்கத்தக்கதாயினும், இது பிரச்சினையின் ஒரு பக்கமே. மருந்துகளைப் பயன்படுத்தும் பொதுமக்களின் பங்கும் இதற்குச் சம அளவு முக்கியமானது. மருந்தகங்களில் சட்ட அமலாக்கம் குறைவானது என்பது மருந்து வழங்கலில் மட்டுமே பிரச்சினையல்ல; அது மக்களின் உயிர், ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை நேரடியாகத் தொடும் ஒரு முக்கிய பிரச்சினையாகும்.

உழுதலாவதாக, மருத்துவர்கள் – சிகிச்சை சங்கிலியின் முதல் கட்டமாக – தங்கள் பொறுப்பை உணரவேண்டும். மருந்து எழுதுவது ஒரு நடைமுறையாக அல்ல; நோயாளி அதை எவ்வாறு, எவ்வளவு, எத்தனை நாட்களுக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதில் தெளிவான விளக்கம் அளிக்கப்படவேண்டும். ஆனால், பெரும்பாலான நோயாளிகள் தங்களுக்கு வழங்கப்பட்ட மருந்தின் பயன்பாடு குறித்து முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் அதை எடுத்துக்கொள்வதோ, சிலர் தன்னிச்சையாக மாற்றம் செய்வதோ வழக்கமாகிவிட்டது. இதனால் சிகிச்சை பயனின்றிப் போவதோடு, சில நேரங்களில் பக்கவிளைவுகளும் ஏற்படுகின்றன. இதற்குக் காரணம் தெளிவற்ற மருந்துப் பரிந்துரைகளும், மருத்துவர்கள் மற்றும் நோயாளிகளுக்கு இடையிலான தகவல் பரிமாற்றக் குறைபாடுகளுமே ஆகும்.

அடுத்ததாக, மருந்தாளர்களின் பங்கு மிக முக்கியமானது. மருந்து விற்பனை என்பது வணிகம் மட்டுமல்ல, அது ஓர் உயிர் காப்பு சேவையாகும். சட்டப்படி உரிமம் பெற்ற மருந்தாளர் எப்போதும் கடையில் இருப்பது கட்டாயம். ஆனால் பல மருந்தகங்கள் பதிவு செய்யும் சமயத்தில் மட்டும் உரிமம் பெற்ற ஒருவரின் பெயரைக் காட்டி, தினசரி நடைமுறையில் அவர் இல்லாமலே செயல்படுவது வழக்கமான குற்றமாகவே மாறிவிட்டது. இதுபோன்ற மோசடிகள் பொதுமக்களின் நலனுக்கு ஆபத்தானவை. பெரும்பாலான மருந்தகங்களில் இதுவே வழமை என்று சொல்லலாம்.

மருந்தாளர்கள் தங்கள் தொழில்முறை ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். மருந்து வழங்கும்போது நோயாளியிடம் அந்த மருந்தின் பயன்பாடு, அளவு, பக்கவிளைவு குறித்துச் சுருக்கமாக விளக்க வேண்டும். சில நேரங்களில் மக்கள் மருத்துவரை விட மருந்தாளர்களிடம்தான் விளக்கம் கேட்பது வழக்கம். ஆகவே, அவர்கள் கல்வி மற்றும் விழிப்புணர்வை பரப்பும் முக்கிய பங்கில் இருப்பதை உணரவேண்டும்.

பொதுமக்களும் தங்கள் பொறுப்பை மறக்கக்கூடாது. "முன்னே எடுத்த மருந்து எனவே மீண்டும் எடுத்துக்கொள்ளலாம்" என்ற பழக்கத்தை நிறுத்தவேண்டும். ஒவ்வொரு நோயுக்கும் ஒரே மருந்து பொருந்தாது. தன்னிச்சையாக மருந்து வாங்குவது அல்லது பழைய பரிந்துரைகளை மீண்டும் பயன்படுத்துவது அபாயகரமானது. மருந்தை எடுத்துக்கொள்ளும் பொது ஒழுங்கு இல்லாமை, குறிப்பாக அன்டிபயோடிக் மருந்துகளின் தவறான பயன்பாடு, எதிர்ப்பு சக்தி (antimicrobial resistance) உருவாகும் அபாயத்தை அதிகரிக்கிறது.

இதற்கு மேலாக, மருந்தகச் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் அரசின் பொறுப்பு மிகப் பெரிது. சட்டங்கள் இருப்பது போதுமானதல்ல; அவை கடுமையாகவும் துல்லியமாகவும் அமல்படுத்தப்படவேண்டும். பதிவு செய்யப்படாத மருந்தகங்களை மூடுவதும், உரிமம் இல்லாத மருந்தாளர்களை வேலைக்கு அமர்த்தும் கடைகளுக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுப்பதும் அவசியம். அத்தோடு, சில கடைகள் விற்பனை செய்யும் சில "ஓவர்த் தி கவுண்டர்" (over-the-counter) மருந்துகளான பராசிட்டமோல் போன்றவை தவறாகப் பயன்படுத்தப்படுவது குறித்து அதிகாரிகள் சிறப்பு கவனம் செலுத்தவேண்டும். கடந்த காலத்தில் இத்தகைய மருந்துகள் தற்கொலை முயற்சிகளிலும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் கருத்தடை மாத்திரைகளாகவும் இவற்றைச் சிலர் பயன்படுத்துகிறார்கள் என்கிற தவலுமுண்டு. இவை மிக மிக ஆபத்தான செயற்பாடுகள்.

மொத்தத்தில், இது அரசு, மருத்துவர்கள், மருந்தாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகிய நான்கு தரப்பினரின் ஒருங்கிணைந்த பொறுப்பாகும். மருந்துகள் வெறும் வணிகப் பொருள்கள் அல்ல; அவை உயிரை காக்கக்கூடியவையாகவும் அழிக்கக்கூடியவையாகவும் இருக்கின்றன. சட்டம், ஒழுக்கம், விழிப்புணர்வு – இம்மூன்றும் ஒன்றிணையும்போதுதான் இலங்கையின் மருந்தகத் துறை நம்பகமான பாதையில் செல்லும். இது அரசின் கடமை மட்டுமல்ல, ஒவ்வொரு குடிமகனின் கடமையும் ஆகும்.

# டயானா கமகேவுக்கு எதிரான வழக்கில் சாட்சி விசாரணை

## நேற்றுத் தொடங்கியது



முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவுக்கு எதிராகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் சாட்சி விசாரணை நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றில் தொடங்கியது.

வெளிநாட்டு கடவுச்சீட்டு ஒன்றைப் பெறுவதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு பொய்யான தகவல்களைச் சமர்ப்பித்தமை மற்றும் சரியான விசா இன்றி இலங்கையில் தங்கியிருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அதன்படி, குறித்த வழக்கு கொழும்பு பிரதான நீதிவான் அசங்க எஸ். போதரகம முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, பிரதிவாதியான டயானா கமகேவிடம் நீதிமன்றினால் குற்றச்சாட்டுகள் வாசித்துக் காட்டப்பட்ட நிலையில், தான் நிரபராதி என அவர் நீதிமன்றில் அறிவித்தார்.

அரசதரப்பு சட்டத்தரணி அகிலா தர்மதாது நெறிப்படுத்தலின் கீழ், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் முன்னாள் அதிகாரி ஹன்சிகா குமாரசிறியிடம் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, வழக்கின் மேலதிக சாட்சி விசாரணை டிசம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டு ஜூலை 14 முதல் 2020 நவம்பர் 1 வரையான காலப்பகுதியில் உரிய விசாவின்றி இலங்கையில் தங்கியிருந்தமை மற்றும் வெளிநாட்டு கடவுச்சீட்டு ஒன்றைப் பெறுவதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு பொய்யான தகவல்களை வழங்கியதன் மூலம் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் குற்றம் இழைத்தனர் எனக் குற்றஞ் சுமத்தி, சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் 7 குற்றச்சாட்டுகளின் கீழ் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# நாடாளுமன்றப் பணியாளர்களிடம் மேலும் வாக்குமூலங்கள் பதிவு

நாடாளுமன்ற தகவல் கட்டமைப்பு மற்றும் முகாமைத்துவ திணைக்களத்தின் ஒருசில அதிகாரிகளுக்கு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் துன்புறுத்தல்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் வெளிவாரி விசாரணை குழு, அங்கு மேலும் சில ஊழியர்களிடம் வாக்குமூலம் பெற்றுக்கொண்டுள்ளது.

முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி சுஜாதா அழகப்பெருமவின் தலைமையிலான இந்த குழுவின் விசாரணை நடவடிக்கை இந்த வாரத்தில் முடிவுக்கு வர இருக்கிறது. விசாரணைகள் முடிவடைந்த பின்னர் அதன் அறிக்கை பெரும்பாலும் இரண்டு வாரங்களுக்குள் சபாநாயகருக்கு கையளிக்கப்படும் எனத் தெரியவருகிறது.

குறித்த வெளிக்கள விசாரணை குழு நாடாளுமன்ற பொதுச் செயலாளர், பிரதிச் செயலாளர் மற்றும் உதவிச் செயலாளர் ஆகியோரிடம் கடந்த தினங்களில் வாக்குமூலம் பதிவு செய்துள்ளது. இந்த மூன்று பேரிடமும் நிர்வாகம் தொடர்பான சில விடயங்களை கேட்டு தெளிவு பெற்றுக்கொள்ளவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறியக்கிடைக்கிறது.

அதேபோன்று சம்பவம் தொடர்பில் தகவல் கட்டமைப்பு மற்றும் முகாமைத்துவ திணைக்களத்தின் பிரதானிகள் முறைப்பாட்டு அதிகாரி மற்றும் முன்னாள் நிர்வாக பணிப்பாளர் ஆகியோரிடமும் இதற்கு முன்னர் வாக்குமூலம் பெறப்பட்டிருக்கிறது.

காலைக்கதிர்
Kalaikkathir

# உண்மை உறைக்கும்போது...

என்.சத்திய மூர்த்தி



அரசியல் தீர்வு என்ற பேச்சு எழுந்தாலே, தமிழ் தலைமைகள் 'பதிமூன்றிற்கும் அப்பால்' என்ற கருத்தை முன்வைக்கின்றன. அதில்அவர்களுக்குள் ஆயிரத்தெட்டு வேறுபாடுகள். சிலர், பதிமூன்றாவதுஅரசியல்சட்டதிருத்தத்தை முழுமையாக அமல்படுத்தவேண்டும் என்று இன்று சொல்வார்கள். நாளையே அதனை மாற்றி, 'இல்லை, இல்லை... சமஷ்டியே முழுமையான தீர்வு' என்பார்கள். மற்றொரு தரப்பினர், தமிழ் அரசு கட்சியின் தலைமை போல், 'இப்போது பதிமூன்று. பின்னர் சமஷ்டி' என்று, முள்ளும் உடையாமல், துணியும் கிழியாமல் 'பாலன்ஸ்' செய்ய எத்தனிப்பார்கள்.

இவர்கள் அனைவரது சொல் மற்றும் செயல்களின் காரணமாக, தமிழர்களுக்கு அரசியல் தீர்வு எட்டாக் கனியாகவே தொடருகிறது. உண்மை என்னவோ, ஏதோ ஒரு விதத்தில் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளும் அரசியல் தீர்வு கிடைத்து விட்டால், இவர்களின் ஆட்டம் அடங்கிவிடும். கொட்டமும் இல்லாததாகிவிடும். அது அவர்களுக்கும் தெரியும். அவர்களைவிட, தமிழ் மக்களுக்கும் தெரியும்.

தற்போதைய தேசிய மற்றும் தமிழ் அரசியல் பரப்பில், பதிமூன்றாவது தீர்வுத் திட்டத்தின் முழுமையான செயல்பாடு, நடைமுறைச் சாத்தியமானது. அதாவது, சமஷ்டி என்றெல்லாம் பேசி, கால-நேரத்தை விரயம் செய்வதற்குப் பதிலாக, பதிமூன்றைச் சுற்றி ஓர் அரசியல் முடிவை எடுக்க அரசுத் தலைவர் அநுரகுமார தலைமையிலான அரசிற்கு தமிழ் தலைமைகள் ஒருமித்து அழுத்தம் கொடுக்கவேண்டும். அப்போது, அதிக பிரசங்கிதனமாக 'சமஷ்டி' குறித்தும் யாராவது பேசினால், அவர்கள் உண்மையில் அரசியல் தீர்வு எதனையும் விரும்பாதவர்கள் என்பதை தமிழ் மக்கள் உறுதிசெய்யவேண்டும்.

முன்பு, இனப்போர் முடிந்த காலகட்டத்தில், அன்று உயிரோட்டமாக இருந்த தமிழ் தேசிய கூட்டமைப்புடன் அன்றைய மகிந்த ராஜபக்ச அரசு, அரசியல் தீர்வு திட்டம் குறித்துப் பேச்சு நடத்தியது. அதில், பொலிஸ் அதிகாரம் தவிர்த்து பிற பிரச்சினைகளில் சுமுகமான முடிவுகள் எட்டப்பட்டன என்பதே உண்மை.

அதிலும் குறிப்பாக, வடமாகாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சமஷ்டி, வளர்ச்சிப் பணிகளுக்காக வெளிநாடுகளில் இருந்து நேரடியாக நிதி உதவி பெற்றுக்கொள்ளலாம் என்ற ஒரு முடிவும் எட்டப்பட்டது. அல்லது இவ்வாறான ஒரு முடிவு குறித்து தென்னிலங்கை பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. அதனை அரசோ அல்லது கூட்டமைப்போ மறுக்கவில்லை.

## சாத்தியமாகவில்லை

பொலிஸ் அதிகாரம் குறித்தும், தமிழர்கள் ஏற்றுக்கொள்ளும் நல்ல முடிவை அரசு எடுக்கும் என்ற சூசகமான சமிக்ஞை மகிந்த தரப்பில் இருந்து தமிழர் தரப்பிற்கு கிடைத்தது. ஆனால், குறிப்பாக அந்த முடிவு குறித்து அனைத்து கட்சியினருடனும் பேசியே முடிவெடுக்கப்பட வேண்டும் என்பது, மகிந்தவின் நிலைப்பாடாக இருந்தது. அதற்கு அவர் கூறிய காரணம், முன்பு அனைத்துக் கட்சி உடன்பாடு இல்லாமலே பதிமூன்றாவது தீர்வு திட்டம் நிறைவேற்றப்பட்டதால், அதற்கு தென்னிலங்கையில் அரசு மற்றும் அரசியல் தரப்புகளில் வரவேற்பு இருக்கவில்லை. அவ்வாறான ஒரு நிலை, தான் முன்வைக்கும் தீர்வு திட்டத்திற்கும் நேர்ந்துவிடகூடாது என்பதேயாகும்..

சரியோ, தவறோ, மகிந்த சுட்டிக் காட்டியது போல், 1987ஆம் ஆண்டு, பதிமூன்றாவது தீர்வுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றும்போது, அதிபர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் பிரதமராக இருந்த ரணசிங்கே பிரேமதாசா, அந்தச் சட்டவரைவை முன்மொழிந்த அமைச்சரவைக் கூட்டத்தையே புறக்கணித்தார். அதுபோன்று, அவர்களது ஆளும் ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைநகர் கொழும்புவில் உள்ள நட்சத்திர ஹோட்டல்களில் 'சிறை வைக்கப்பட்டிருந்தார்கள்' என்றும் பிரேமதாச தரப்பே கதை கட்டிவிட்டது.

இவை எதற்குமே பதிமூன்றாவது தீர்வு திட்டத்தை முன்வைத்து அரசியல் தீர்வை முன்னெடுத்த இந்தியாவிற்குப் பங்கு இல்லை. ஆனால், ஜெயவர்த்தனவின் மூக்கை உடைக்கவேண்டும் என்று பிரேமதாசா எடுத்த முன்னெடுப்புகளும் முடிவுகளும் இந்தியாவையும் குறி வைத்தே எடுப்பதாக அவர்களது ஆதரவாளர்கள் நம்பினார்கள். எது எப்படியோ, நாடாளுமன்றம் பதிமூன்றாவது தீர்வுத் திட்டத்திற்கு ஆதரவாக அரசமைப்பு மாற்றங்களுக்கு வாக்களித்த பின்னர், அந்தச் சர்ச்சைகள் காணமால் போயின.

என்றாலும்,ஜெவர்தனவைத் தொடர்ந்து அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரேமதாசா, பதிமூன்றாவது தீர்வுத் திட்டமும் நீர்த்துப்போகும் விதமாகவே முடிவுகளை எடுத்தார். அதுவே, தொடர்ந்து வந்த சந்திரிகா அம்மையார் ஆட்சி காலத்திலும் தொடர்ந்தது. அவரது ஆட்சிக் காலமானாலும், தொடர்ந்து வந்த மஹிந்தா ஆட்சி காலமானாலும், விடுதலை புலிகள் அமைப்புடனான அரசின் போர் தொடர்ந்ததால், பெரிதாக எதுவும் சாத்தியமாகவில்லை.

என்ன, வெண்ணை திரண்டு வரும்போது தாழி உடைந்த கதையாக, மகிந்த அரசுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பேச்சு நடத்தி வந்த காலகட்டத்தில், ஐ.நா. மனித உரிமை அமைப்பில் போர் குற்றங்கள் குறித்து அமெரிக்கா தலைமையிலான மேல் நாடுகள், ஒரு தீர்மானத்தை முன்வைத்தன. இலங்கை இராணுவத்திற்கு எதிரான அந்த முயற்சி, தங்களது அழுத்தத்தாலே நடந்தது என்று கூட்டமைப்புத் தலைவர்கள் சிலர் பத்திரிகையாளர்கள் மத்தியிலேயே மார்தட்டி கொண்டார்கள். இதனைத் தொடர்ந்து, ஆளும்தரப்பு பேச்சுக்களை தொடராமல் முறித்துக்கொண்டது.

அவ்வாறாக, பதிமூன்றை முழுமைஷ்யாக நிறைவேற்றும் வாய்ப்பினைத் தமிழ் அரசியல்வாதிகளே இல்லாமலாக்கிக்கொண்டார்கள். இதுவும் திட்டமிட்ட சதியே. ஆனால், அதற்கான பழியை இன்றளவும் மகிந்த தலையின் மேல். தமிழ் அரசியல்வாதிகள் போட்டு விடுகிறார்கள். அவர்களும்கூட அந்தப் பேச்சுக்களின் முடியாத முடிவுகள் குறித்து தமிழ் மக்களிடம் இப்போதும் பேசுவதில்லை.

## காலத்தின் கட்டாயம்

தற்போதைய நிலையில், அறிவார்ந்த தமிழ் தலைவர்கள், இப்போதுள்ள பதிமூன்றை முழுமையாக செயல்படுத்துவதில் முனைப்புக் காட்ட வேண்டும். காரண-காரியங்கள் எதுவாக இருந்தாலும், எப்படி தமிழ் மக்கள் சிங்களவர்களை நம்பவில்லையோ. அதுபோன்றே ஒரு சராசரி சிங்களவனும் தமிழர்கள் மீது நம்பிக்கை வைப்பதில்லை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், சிங்கள பேரினவாதமே அவர்கள் கண் முன்னால் நிற்கிறது. சிங்களவர்களுக்கோ, ஒவ்வொரு தமிழனும் இன்னமும் ஒரு போராளிதான். பிரிவினைவாதிதான். இதுதான் உண்மை நிலைமை. அது காலத்தின் கட்டாயம்.

அதற்காக. தமிழ் அரசியல் தலைமைகள் இல்லாத ஊருக்கு இன்னமும் வழி தேட வேண்டுமா? மணலை கயிறாக திரித்து, அதனை பிடித்துக்கொணடு, வானத்தில் ஏறிச் சென்றுவிடலாம் என்று தங்கள் மக்களையே தொடர்ந்து ஏமாற்ற வேண்டுமா? எத்தனை நாட்களுக்கு இந்த நாடகம்?

தற்போதைய தமிழர் தலைமை முன்பு இருந்த அனைத்துத் தலைமைகளையும்விட அரசியல் ரீதியாகவும் கொள்ளை ரீதியாகவும் படு 'வீக்'. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை. அடுத்த தலைமுறை தலைவர் என்று ஒருவரும் தோன்றிவிடவில்லை. ஆனால், கிழக்குமாகாணத்தில் அரசியல் செய்பவர் என்ற ஒரே காரணத்திற்காக, சாணக்கியனை தலைவராக வட மாகாணம் ஏற்றுக்கொள்ளாது. அவர்களைப் பொறுத்தவரையில், 'மகன் செத்தாலும் பரவாயில்லை....' என்ற மனப்பான்மையே தொடருகிறது.

## வெத்து வேட்டு

இன்றளவிலும் சாணக்கியனைத் தவிர்த்து எந்தவொரு இளம் தலைவரையும் தமிழர் தலைமைகள் அடையாளம் காட்டவில்லை. தந்தை செல்வா, பின்னர் அமிர்தலிங்கம் தவிர்த்து அடுத்த வந்த சம்மந்தன், ஆனந்தசங்கரி போன்ற மூத்த தலைவர்கள் தங்களது பதவியை காப்பாற்றிக் கொள்ளவே அரசியல் செய்தார்கள். அடுத்த தலைமுறைத் தலைமை குறித்து அவர்கள் கவலைப்படவில்லை. அந்த நிலைமையே இன்றளவும் தொடருகிறது. வெட்கம்!

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், சம்மந்தனால் அடையாளம் காட்டப்பட்ட நீதியரசர் விக்னேஸ்வரன் தான் ஒரு 'வெத்து வேட்டு' என்று நிரூபித்துச் சென்றார். சம்மந்தனால் அடையாளம் காட்டப்பட்ட மற்றொரு தலைவரான சுமந்திரனும் விக்னேஸ்வரனை போலவே, 'கொழும்பு அரசியல்வாதி' என்ற பட்டத்தை தொடர்ந்து சுமந்து வந்துள்ளார். அதன் காரணமாகவே, கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அவரால் வெற்றி பெறமுடியவில்லை.

தற்போது, சுமந்திரன் வட மாகாண முதலமைச்சர் பதவி மீது கண் வைத்துள்ளார். கட்சியை கலக்காமல், தானாகவே தன்னை முதலமைச்சர் வேட்பாளர் என்று பிற தமிழ்க் கட்சித் தலைமைகளிடம் அவர் தெரிவித்து கன காலம் ஆகிவிட்டது. ஆனால், அவர்கள் யாருமே சுமந்திரனின் ஆசைக்கு இன்றுவரை நீர் வார்க்கவில்லை. என்ன, அவர்களுக்கு அந்த அளவிற்கு வாக்காளர் ஆதரவும் இல்லை என்பதும் கள நிலைமை.



## செல்லாக் காசு

இந்தப் பின்னணியில், இன்னமும் ஊரை ஏமாற்றிக்கொண்டு, 'பதிமூன்றிற்கும் அப்பால்' என்று தற்போதைய தமிழ்த் தலைமைகள், இலக்கு இல்லாமலே அரசியல் செய்தால், முதலில் தற்போதைய இனப்போருக்கு பிந்தைய தலைமுறையினரின் ஆதரவை இழப்பார்களா. தற்போதைக்கு உள்ளதைவிட அந்தப் பிரிவு கொடுமையாக இருக்கும்.

கடந்த அதிபர், நாடாளுமன்றம் மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்களில் எல்லாம், இவர்களால் அரங்கு நிரம்பிய ஒரு பரப்புரைக் கூட்டத்தையும் கூட்ட முடியவில்லை. காரணம், அந்தச் சிறிய அரங்கங்கள் எல்லாம்கூட மக்களால் நிரம்பவில்லை. இவர்களாவது, பொது வெளியில்,பரப்புரைக் கூட்டங்களை நடத்துவது?

இது போன்ற காரணங்கள், வெறும் வார்த்தைகளாக மட்டுமே தற்போது தோன்றும். ஆனால், அடுத்த பத்து-இருபது ஆண்டுகளில் உண்மை உறைக்கும் போது, இப்போது சவால்விடும் தலைவர்கள் உயிரோடு இருக்க மாட்டார்கள். அதற்கு முன்னரே அரசியலில் செல்லாகாசாக அவர்கள் மாறி இருப்பார்கள்.

இதன் காரணமாக மட்டுமாவது, தமிழ் தலைமைகள் ஒருங்கிணைந்தோ, மற்ற வழிகளிலோ, தற்போது அரசியல் சாசனத்தின் ஒரு பகுதியாக இருக்கும் பதிமூன்றாவது தீர்வுத் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்த அரசிற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். தங்களுக்கு ஆதரவான சிங்களத் தலைவர்கள், அவர்களை ஆசிர்வதிக்கும் மூத்த புத்த பிக்குகள் ஆகியோரை தங்கள் கோரிக்கைக்கு செவிமடுக்கச் செய்யவேண்டும்.

அது போன்றே, தென்னிலங்கையில்; மாகாண அரசியலில் முடக்கி வைக்கப்பட்டிருக்கும் அனைத்து கட்சித் தலைவர்களுக்குமாக விளக்கங்கள் அளிக்கவேண்டும். அவர்களது ஆசியுடன் தென்னிலங்கையில் மக்களை சந்தித்து பேச்சு நடத்தவேண்டும்.

பதிமூன்று குறித்த தங்களது கோரிக்கையின் நியாயத்தை ஏற்றுக்கொள்ளும் கொழும்பு அறிவு ஜீவிகள் மற்றும், தென்னிலங்கை பல்கலைகழக ஆசிரியர்கள் உதவியுடன் கருத்தரங்குகள் நடத்தவேண்டும். தென்னிலங்கையில் மாகாண அரசியலில் முக்கியமான அரசியல்வாதிகளை அவர்களுடைய வீடுகளிலேயே சென்று சந்திக்க வேண்டும்.

தேவையென்றால், உச்சநீதிமன்றம்சென்று, அரசமைப்பு மீறபடுவதற்கு எதிராக வழக்குத் தொடரவேண்டும். அதில் தமிழர் ஆதரவு தீர்ப்பே கிடைக்கும். அதன் காரணமாகத் தீர்ப்பின் பின்னர் இந்த அரசோ அல்லது பிறரோ, அரசியல் சட்டத்தை திருத்தி, பதிமூன்றின் பல்லை பிடுங்க முயற்சிக்கலாம்.

## ஆட்சி அனுபவம்

மொத்தத்தில், இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை ஒரு நாடு தழுவிய மக்கள் எழுச்சியாக மாற்றவேண்டும். அதற்காக, மற்றொரு அரகலயா போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்பதல்ல பொருள். அந்த விதத்தில், பொலிஸ் அதிகாரம் குறித்து தென்னிலங்கை அரசியல் தலைமைகள் சிறிது சந்தேகம் தெரிவித்தால், அதனை ஏற்றுக்கொண்டு, அதற்கான தீர்வை அடுத்த தலைமுறையிடம் விட்டுவிடவேண்டும்.

உண்மை என்னவோ, தென்னிலங்கை அரசியல்வாதிகளும் சரி, கொழும்பு அரச தலைமைகளும் தமிழர்களை இனமும் 'சந்தேக்கக கண்களுடனேயே' பார்க்கிறார்கள். உண்மை என்னவோ, வட மாகாண முதல்வராக வின்னேஸ்வரன் ஐந்து ஆண்டுகள் அடித்தலூட்டி சொல்லிமாளாது. அது தமிழ்த் தலைமைகளுக்கு அரசியல் நிர்வாகத்தை முன்னடத்தி செல்ல போதிய மனநிலையும் அனுபவமும் இல்லை என்பதைப் பறைசாற்றியது. இன்றளவும் அதுவே உண்மை.

இந்தப் பின்னணியில், பொலிஸ் அதிகாரம் கொடுத்தால் மாகாண முதல்வர்கள் நாட்டின் அதிபர்களையே கைது செய்ய விழைவார்கள் என்ற மகிந்தாவின் கூற்றில் உண்மை இருக்குமோ என்ற சந்தேகம் எழுகிறது. எனவே, ஒரு ஐந்து-பத்து ஆண்டுகள் ஆட்சி அனுபவத்தைப் பெற்ற பிறகு, தென்னிலங்கையின் நம்பிக்கையையும் உயிர்பித்துவிட்டு, தமிழர்கள் பொலிஸ் அதிகாரம், வடக்கு-கிழக்கு இணைப்பு என்பது போன்ற சர்ச்சைக்குரிய பிரச்சினைகளைக் கையில்எடுக்கலாம்.

அது அடுத்த தலைமுறையின் வேலையாகக் கூட இருக்கலாம். அதுவே தென்னிலங்கை மாகாண அரசியல்வாதிகளின் ஆசையாக, அத்தியாவசிய தேவையாக மாற்றுவதற்கும் தமிழ் தலைமைகள் இ;ப்போதே முன்னெடுப்புகளைச் செய்யவேண்டும். அதற்கு தற்போது தேவை, அறிவு. ஆணவம் அல்ல. தமிழ் நாட்டில் அண்ணாதுரை கூறியது போல், 'வீரம் விலை போகாது, விவேகம் துணைக்கு வாராவிட்டால்'. அதுதானே சமகால இலங்கை தமிழ் அரசியலின் தலையெழுத்து. தமிழ் மக்களின் தலைவிதி கூட!

காலைக்கதிர் Kalaikkathir

## பாடசாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணி உரிமைகளை வைத்திருக்கும் ஆளும்தரப்புக்குச்சொந்தமானநிறுவனங்கள் அல்லது தனியாருக்குச் சொந்தமான தோட்டக் கம்பனிகள் குறைவான பங்களிப்பையே வழங்கி வருகின்றன.

இன்னும் லயன் அறைகளில் வாழும் மக்களை சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களாக மாற்றி, அவர்களுக்கு மூலதனத்தைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம், பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம். ஒரு வீட்டைப் போன்று செய்கைகளுக்கான காணியும் கிடைக்கும். இவ்வாறு மேற்கொண்டால் அவர்களின் சம்பளப் பிரச்சினைக்குக்கூட இதனால் தீர்வு கிட்டும். பயன்படுத்தப்படாத காணிகளை இவர்களுக்குப் பெற்றுக் கொடுத்து, பெரும் எண்ணிக்கையிலான சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களை உருவாக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தென்னைக் கைத்தொழில் தற்போது பல கடுமையான பிரச்சினைகளை எதிர்கொள்கிறது. தயவுசெய்து இந்த வரவுசெலவுத் திட்டத்திலாவது இவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கவேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் இதன்போது மேலும் வலியுறுத்தினார்.

இதன்போது கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி, தென்னைக் கைத்தொழில் பல கடுமையான பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிறது. ஒரு காலத்தில், தென்னைத் தொழில் முயற்சியாளர்கள் நஷ்டத்தைச் சந்திக்கும்போது, மற்றொரு காலத்தில், அதிக விலை காரணமாக நுகர்வோர் பாதிப்புக்களைச் சந்தித்து வருகின்றனர். மேலும் நோய்களும் அதிகரித்து காணப்படுகின்றன. எனவே இது தொடர்பான புதிய திட்டங்களை, புதிய வரவுசெலவுத் திட்டத்தில் ஆளும்தரப்பு முன்வைக்கவேண்டும் என்றார்.

## யுவான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னணியில் சமகாலத்தில் சீன நாணயத்தின் பரவலான பயன்பாடானது வெளிநாட்டுக் கையிருப்புக்களின் கட்டமைப்பை பல்வகைப்படுத்துவதற்கும், நாணயமாற்று வீத அச்சுறுத்தல்களைக் குறைப்பதற்கும், பரஸ்பர வர்த்தகம் மற்றும் முதலீட்டில் நிலையானதும், குறைந்த செலவினத்துடனான கொடுக்கல், வாங்கல்களை ஊக்குவிப்பதற்கும் பெரிதும் உதவும்.

இலங்கை பொருளாதார மீட்சியின் முக்கியமான கட்டத்தில் இருக்கின்றது. இவ்வேளையில் சீன நாணயத்தின் மூலமான கொடுக்கல், வாங்கல்களை விரிவுபடுத்துவதானது இலங்கைக்குள் வர்த்தகம் மற்றும் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கும், நிதியியல் கட்டமைப்பை நவீனமயப்படுத்துவதற்கும் பங்களிப்புச் செய்யும் என்றார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



உ

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# இளையோரை எதிர்பார்த்திருக்கும் சைவத்தமிழ்ச் சூழல்

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த மொழி தமிழிற்கும் சமஸ்கிருதத்திடம் இருந்து பிறந்து தமிழிடம் இருந்து வளர்ந்த சைவத்திற்கும் மிக நீண்டகால தொடர்பு காணப்படுகின்றது. தமிழ் என்பது உலகத் தொடர்பாடல் மொழிகளிலே மிக நீண்டகால வரலாற்றைக் கொண்டது. சைவமானது மனிதர்களை நெறிப்படுத்தக்கூடியது. மனிதர்களை நெறிப்படுத்தி சிறந்ததொரு மனிதனாக வழிப்படுத்த உதவுகின்ற ஒரு கருவியாகும். இதனால் சைவநெறி என்றும் அழைக்கப்படுகின்றது.

வேறெந்த மொழிகளையும் சமயங்களையும் பின்பற்றுகின்றவர்களுக்கு இல்லாத புகழும் வரலாறும் சைவத் தமிழர்களாகிய எமக்கு உண்டு. ஆனால் தற்கால சமூகத்தில் காணப்படும் புதிய போக்குகளும் கலாசார மாற்றங்களும் சைவத்தையும் தமிழையும் சீர்கேட்டிற்கு உள்ளாக்குகின்றன. இதனால் சைவத் தமிழ் சூழலானது தனது புகழையும் வரலாற்றையும் நிலைநாட்டுவதற்காகவும் எதிர்கால சந்ததியினருக்கு அவற்றைப் பேணிப் பாதுகாத்துக் கொடுப்பதற்காகவும் இளையோரை எதிர்பார்த்து நிற்கின்றது.

உலக மொழிகளிலே தூயமொழி தமிழ் என்றும் தமிழ் மொழியிலும் தூய தமிழ் இலங்கைத் தழிழ் என்றும் அதிலும் குறிப்பாக அலங்கார நல்லூரானின் யாழ்ப்பாணத்துத் தமிழே தூய தமிழ் என்றும் சிறப்பிக்கப்படுகின்றது. நாவலர் காலத்தில் சிறப்புற்றிருந்த தமிழ் அந்நிய மொழிகளின் ஊடுருவலாலும் இந்திய திரைப்படத் தமிழின் கலப்படத்தாலும் தனது தூய்மையை இழந்து கொண்டே செல்கின்றது. ' 'ரென்டிங்' (வீஷௌஜ-ஷ்ஜஆ) என்ற பெயரில் ஆங்கிலம் கலந்து குறை தமிழ் பேசுவதும் குறுஞ்செய்தி அனுப்ப 'தங்கிலீஸ்' பயன்படுத்துவதும் என தமிழில் கலப்படங்கள் ஏராளம். இவற்றையெல்லாம் செய்வது இளைய சமூதாயமாக இருந்தாலும் அதை மீண்டும் சரிசெய்ய இளையோர்களையே நமது சூழல் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது. முள்ளை முள்ளால் எடுப்பது போல சீரழித்தவர்களாலேயே சீராக்க முடியும்.

சைவ சமயமானது சிவனை முழுமுதற் தெய்வமாகவும் தமிழ் கடவுளான முருகன் பிரணவப் பொருளாம் கணபதி ஆகிய தெய்வங்களையும் வழிபடும் மரபினைக் கொண்டது. ஆலயங்களைப் பிரதான நிலையங்களாகக் கொண்டு சைவம் வளர்க்கப்படுகின்றது. சைவத்தின் வளர்ச்சிக்குத் தமிழும் தமிழின் வளர்ச்சிக்கு சைவமும் இணைப் பங்கை வழங்குகின்றன. தேவார திருவாசகங்கள், திருப்புகழ்கள் பக்தியிசைப் பாடல்கள் எனப் பல்வேறு இலக்கியங்கள் மூலம் தமிழும் சைவமும் ஒன்றாக வளம்பெறுகின்றன.

'சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்'

என்று பண்ணோடும் பக்தியோடும் பாடும்போது தமிழ் மொழி நடையாற்றலும் சைவ சிந்தனையும் வளர்கின்றன.

ஆலயங்களில் தூபதீப ஆராதனைகளுடன் பூஜைகள் செய்யப்பட்டு இறைவனை வீதிவலம் வரச்செய்து தேவார பாராயணங்கள் வேத மந்திர உச்சாடனங்கள் ஆன்மீகச் சொற்பொழிவுகள் போன்றன நிகழ்கின்றன. முன்னைய காலத்திலே ஓர் ஆலயத்தில் வருடாந்த மகோற்சவம் என்றால் அவ்வூரே விழாக்கோலம் பூண்டுவிடும். ஊரிலுள்ள இளையோர்கள் ஆலயப்பகுதிகளை சுத்தம்செய்து வீதிகளை அலங்கரித்து தொண்டுகள் பல செய்தார்கள். ஒவ்வொரு நாளும் இறைவனை விதம் விதமாக அலங்கரித்து வாகனங்களில் இறைவனைச் சுமந்து வீதிவலம் வரச்செய்தார்கள்.

ஆனால் இன்றைய காலகட்டத்தில் நகரமயமாக்கலின் செல்வாக்கால் புதிய ஆலயங்களை நிர்மாணிப்பதும் பழைய ஆலயங்களை பராமரிப்பதும் குறைவடைந்து செல்கின்றது. தொலைபேசிகளின் பாவனையாலும் நிகழ்நிலை விளையாட்டுக்களின் செல்வாக்காலும் இளைய சமுதாயம் தொழிநுட்பத்திற்கு அடிமையாகிக் கிடக்கின்றது. நாவலரின் இரு கண்களும் குருடாகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இளையோரின் ஈடுபாடின்மையால் ஆலயங்களில் மின்சார இயங்கு வாத்தியங்களும் ஒலிப்பதிவு செய்த பாடல்களும் ஒலிக்கின்றன. ஆலயத்தை சுத்தம்செய்ய கூலி வேலையாட்கள் ஆலயத்தை அலங்கரிக்க வேறு வேலையாட்கள் என்று தொண்டுகளை தொழில்களாக்கிவிட்டார்கள்.

வீதியுலா வர இறைவன் தயாராயிருந்தும் அவனைச் சுமந்து வர தோள்கள் இல்லாததால் சக்கரம் பூட்டிய சகடைகளிலும் வண்டிகளிலும் அமர்ந்து வீதியுலா வருகின்றான். சமூகத்தின் பரிணாம வளர்ச்சியில் இளையோர்கள் நெறிபிறழ்வாக நடந்தாலும் ஏதோ ஒரு புள்ளியில் முட்டுப்பட்டு முடங்கும்போது உணர்ந்து விடுகின்றார்கள். மீண்டும் ஒரு பரிணாம வளர்ச்சி ஏற்பட்டு இளைய சமுதாயம் அர்ப்பணிப்புடன் செயற்படும். இளைய சமுதாயத்தின் அர்ப்பணிப்பினால் மாத்திரமே இந்நிலையிலிருந்து சைவத்தையும் தமிழையும் மீட்டெடுக்க முடியும். அவ்வாறானதொரு இளையோர் சமுதாயத்தையே சைவத்தமிழ் சூழல் எதிர்பார்த்திருக்கின்றது.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

அபிசாய்ராம்

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு

• CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
• NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
• வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
• ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
• GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# கிழக்குப் பல்கலைக்கழக மாணவருக்கு இந்தியாவின் மேம்படுத்தப்பட்ட உதவி

## நேற்றுத் தொடக்கி வைத்தார் உயராணையர்

கிழக்குப் பல்கலைக்கழகத்திலுள்ள பொருளாதார ரீதியாகப் பலவீனமான பிரிவுகளைச் சேர்ந்த தகுதியான மாணவர்களுக்கு இந்திய அரசின் மானியத்தின் கீழ் மேம்படுத்தப்பட்ட நிதி உதவித் திட்டத்தை இந்திய உயராணையர் சந்தோஷ் ஜா தொடக்கி வைத்தார். நேற்றுஇதற்கானஉத்தியோகபூர்வநிகழ்வுஇடம்பெற்றது. ஏற்கனவே இதுபோன்றதொரு திட்டத்தை இந்தியத் தூதரகம் யாழ். பல்கலைக்கழகத்திலும் செயற்படுத்தி வருகின்றது.

முன்னதாக, கடந்த கல்வி ஆண்டில் இந்திய மானியத்தின் கீழ் ஒரு நிதி உதவித் திட்டம் பல்கலைக்கழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதில், பொருளாதாரப் பின்னணி மற்றும் கல்விச் செயல்திறன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 மாணவர்களுக்கு மாதந்தோறும் 5000 ரூபா உதவித்தொகை வழங்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் பயன்பாடு குறித்த கருத்துகள் மிகவும் சாதகமாக இருந்தன. மேலும் இந்தத் திட்டத்தை நீட்டிக்கவும், மேம்படுத்தவும் பல்கலைக்கழக அதிகாரிகள், மாணவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தாரிடமிருந்து பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

அதற்கமைய 2024 டிசம்பரில் அரசுத் தலைவர் அநுரகுமாரவின் இந்தியப் பயணத்தின்போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகிய இரு பல்கலைக்கழக மாணவர்களுக்கும் மேம்படுத்தப்பட்ட திட்டத்தை இந்தியா நடைமுறைப்படுத்தும் என்று அறிவித்தார்.

அதற்கமைய அவரால் அறிவிக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ், நடப்பு கல்வி ஆண்டு முதல், ஒவ்வொரு ஆண்டும், முதல் ஆண்டில் 100 இளங்கலை மட்ட மாணவர்களுக்கு ஒரு மாணவருக்கு மாதந்தோறும் 7,500 ரூபா நிதி உதவி வழங்கப்படும். மேலும் இது அவர்களின் கல்விப் பாடநெறி முடியும் வரை தொடரும். இதன் மூலம், இத்திட்டம் செயல்படுத்தப்படும் நான்காம் ஆண்டில், பல்கலைக்கழகத்தில் 400 மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும்.

இந்த மேம்படுத்தப்பட்ட திட்டத்தைத் தொடக்கி வைக்கும் நிகழ்வில் உரையாற்றிய இந்திய உயராணையர், இத்திட்டமானது கிழக்கு மாகாணத்தின் சமூக-பொருளாதார வளர்ச்சியை ஆதரிப்பதற்கான இந்தியாவின் பரந்த அபிவிருத்தி உதவி முன்முயற்சிகளின் ஒரு பகுதியாகும் என்று வலியுறுத்தினார்.

### வெலிகம பிரதேச சபை தவிசாளர்

# கொலைச் சந்தேகநபர்களின் விளக்கமறியல் காலம் நீடிப்பு

*வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் லசந்த விக்கிரமசேகர சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 7 சந்தேகநபர்களும் நவம்பர் மாதம் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.*

*குறித்தசந்தேகநபர்கள் நேற்றுமாத்தறை பிரதான நீதிவான் சதுர திசாநாயக்க முன்னிலையில் நிறுத்தப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.*

*இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாகத்துப்பாக்கிதாரி, மோட்டார் சைக்கிள் செலுத்துனர் உட்பட மொத்தம் 9 சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*அவர்களில் துப்பாக்கிதாரி மற்றும் மோட்டார் சைக்கிள் செலுத்துனரை தவிர, துப்பாக்கிதாரியின் மனைவி, கெக்கிராவையில் மறைந்திருக்க உதவிய ஒருவர், பொரளை சஹஸ்புர பிரதேசத்தில் துப்பாக்கிதாரிக்கு உதவிய இருவர் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.*

*அதுமட்டுமின்றி, கொலைக்கு முன்னரும் பின்னரும் துப்பாக்கிதாரிக்கு போக்குவரத்து வசதி வழங்கிய காலி அகுலுகஹ பகுதியைச் சேர்ந்த முச்சக்கர வண்டிச் சாரதி, கொலைக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளுக்கு ஸ்டார்டர் மோட்டார் பொருத்தி பழுதுபார்த்துக் கொடுத்த வெலிகம வலானவில் உள்ள வாகன பழுதுபார்க்கும் நிலையத்தின் உரிமையாளர் மற்றும் கொலையாளிகளுக்கு மோட்டார் சைக்கிளைக் கொண்டு வந்து கொடுத்த பொலத்து மோதரத்தைச் சேர்ந்த இளைஞன் ஆகியோரும் நேற்று நீதிவான் முன்னிலையில் நிறுத்தப்பட்டனர்.*

*இதன்போது, வெலிகம பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்கள் மற்றும் ஏனைய சந்தேகநபர்கள் தொடர்பாக எந்தப் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என்று நீதிவான் நிதி மோசடி விசாரணைப் பிரிவிடம் வினவினார்.*

*அதற்குப் பதிலளித்த அவர்கள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மேலதிக விவரங்களைப் பதிவு செய்ய இருக்கின்றனர் என்று குறிப்பிட்டனர்.*

*இதற்கிடையில், வெலிகம பிரதேச சபைத் தலைவர் கொலைச் சம்பவம் தொடர்பில் துப்பாக்கிதாரியும் மோட்டார் சைக்கிள் செலுத்துனரும் நிதி மோசடி விசாரணைப் பிரிவின் காவலில் உள்ளனர்.*

*அவர்களை 90 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*
















இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.10.2025இல் வெளியிடப்பெற்றது